ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2118/59 - 2019 අප්‍රේල් මස 11 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.04.11

*2118/59 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 9/73* (xii).

***(469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்***

*2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை*

*(469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, சுற்றுலா அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க ஆகிய நான், இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட காணி இடப்பரப்பை, மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காகச் சரணாலயம் ஒன்றாகவிருப்பதற்கு இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன் என்பதுடன், அத்தகைய சரணாலயம் ''காயன்கேர்ணி கடலோர சரணாலயம்'' என அழைக்கப்படுதலும் அறியப்படுதலும் வேண்டுமென மேலும் வெளிப்படுத்துகின்றேன்.*

*ஜோன் அமரதுங்க,*
*சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும்*
*கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்.*

*கொழும்பு,*
*2019, ஏப்பிறல் 11.*



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை

*காயன்கேர்ணி கடலோர சரணாலயத்தைக் கொண்டுள்ள காணி இடப்பரப்பின் எல்லைகள்*

*கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில் கோரளைப்பற்று வடக்கு பிரதேச செயலாளர் பிரிவினுள் அமைந்துள்ளதும் பரப்பளவில் 953 ஹெக்டெயர்களைக் கொண்டதும் பின்வருமாறு நில அளவையாளர் திணைக்களத்தின் 1:50,000 என்ற தேசப்பட விகிதத்துக்கிணங்க எஸ்எல்டி 99 ஆயத்தொலை முறைமையிலிருந்து பெறப்பட்ட ஜீபீஎஸ் ஆயத்தொலைகளினால் எல்லைப்படுத்தப்பட்டதுமான அக்காணிப் பரப்பு அடங்கலும் மற்றும் அக்காணிப்பரப்புக்கு அருகாமையில் உள்ள கடலோர வலயமும் :-*

வடக்கு : *மாங்கேர்ணி கரையோரத்தில் அமைந்துள்ள ஆயத்தொலைகள் 278940E 312029N என்பவற்றின் புள்ளியிலிருந்து தொடங்கி, அங்கிருந்து கிழக்கு நோக்கி ஏறத்தாழ 2.7 கிலோ மீற்றரான நேர்கோடு வழியாக கடலில் அமைந்துள்ள ஆயத்தொலைகள் 281712E 312134N என்பவற்றின் புள்ளிவரை ; அங்கிருந்து தென்கிழக்கு நோக்கி 4.8 கிலோ மீற்றர் தூரமொன்றினுள் கடலினுள் அமைந்துள்ள ஆயத்தொலைகள் 286491E 311129N என்பவற்றின் புள்ளி வரை ;*

கிழக்கு : *வடக்கெல்லையில் கடைசியாகக் குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து தெற்கு நோக்கி ஏறத்தாழ 1.9 கிலோ மீற்றரான நேர்கோடு வழியாக கடலின் தெற்கில் அமைந்துள்ள ஆயத்தொலைகள் 286495 E 309193N என்பவற்றின் புள்ளி வரை ; அங்கிருந்து தென்மேற்கு நோக்கி ஏறத்தாழ 3.5 கிலோ மீற்றர்கள் அமைந்துள்ள ஆயத்தொலைகள் 284452E 306614N என்பவற்றின் புள்ளி வரையும் பெரியவட்டுவான் கால்வாயின் முகத்துவாரம் சந்திக்கின்ற வரையும் ;*

தெற்கு : *கடைசியாகக் குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து வடமேற்கு நோக்கி ஏறத்தாழ 466 மீற்றரான கால்வாய் வழியாக அமைந்துள்ள ஆயத்தொலைகள் 284149 E 306877N என்பவற்றின் புள்ளி வரை ;*

மேற்கு : *கடைசியாகக் குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து வடகிழக்கு நோக்கி காயங்கேர்ணி கரையோரத்தில் அமைந்துள்ள 714 மீற்றர் தூரமொன்றினுள் அமைந்துள்ள ஆயத்தொலைகள் 284380 E 307553N என்பவற்றின் புள்ளி வரை ; அங்கிருந்து வடமேற்கு நோக்கி ஏறத்தாழ 1.1 கிலோ மீற்றர்கள், தென்னடி குடாக்கு அண்மையில் உள்ள வீதியில் சந்திக்கின்ற ஆயத்தொலைகள் 283794E 308593N என்பவற்றின் புள்ளி வரை ; அங்கிருந்து அவ்வீதி வழியாக, அமைந்துள்ள ஆயத்தொலைகள் 283629E 308609N, 283114E 308681N, 282940E 308793N, 282358E 309282N, 282062E 309522N என்பவற்றின் புள்ளிவரை ; அங்கிருந்து வடமேற்கு நோக்கி ஏறத்தாழ 759 மீற்றர்கள், வலிகுடா பெரியமுனைப்புள்ளிக்கு அண்மையில் உள்ள கால்வாயை சந்திக்கும் ஆயத்தொலைகள் 281716E 310198N என்பவற்றின் புள்ளிவரை ; அங்கிருந்து மேற்கு நோக்கி ஏறத்தாழ 1.4 கிலோ மீற்றரான கால்வாய் வழியாக அமைந்துள்ள ஆயத்தொகைகள் 281613E 310101N, 281496E 310053N, 281380E 309994N, 280917E 309977N என்பவற்றின் புள்ளிவரை ; அங்கிருந்து வடமேற்கு நோக்கி ஏறத்தாழ 2.8 கிலோ மீற்றரான நேர்கோடு வழியாக அமைந்துள்ள ஆயத்தொலைகள் 278940E 312029N என்பவற்றின் ஆரம்பப் புள்ளிவரை.*

KAYANKERNI MARINE SANCTUARY

